# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

செ.வெ.எண். 134 நாள்: 16.06.2025

**பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்கு தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், சித்தரஞ்சன் சாலையில் உள்ள குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்கு தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (16.06.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், முறையாக கைகழுவுவதன் அவசியம், கைகழுவும் முறை மற்றும் ஓ.ஆர்.எஸ். உப்பு சர்க்கரை கரைசல் தயாரிக்கும் முறை குறித்த விளக்க நிகழ்ச்சியினைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, ஓ.ஆர்.எஸ். கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் முறை குறித்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பதாகையினை வெளியிட்டார். மேலும், குழந்தைகள் மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு 2 ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகள், 14 துத்தநாக மாத்திரைகள், விழிப்புணர்வு கையேடு மற்றும் பரிசு ஆகியவை அடங்கிய மருத்துவப் பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், இ.ஆ.ப., பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.எஸ். செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர் டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் திரு.கி.மதிவாணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**